எம்.சி.ஓ.பி எண்: 4967/2017 தேதி: 19.12.2025

மசா. : 2

பெயர் : சீனிவாசன்

த/பெ. : கணேசபாண்டி

வயது : 38

**<u>சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 15 மட்டும் தாக்கல் செய்கிறேன்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நீதிமன்ற அழைப்பாணை பேரில் சாட்சியம் அளிக்கவரவில்லை. 3ம் மனுதாரர் தரப்பில் கேட்டுகொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். விபத்தை பார்த்ததற்கும் சம்பவ இடத்தில் இருந்தேன் என்பதற்கும் ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து குறித்து காவல் நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை. யார் புகார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. விபத்து குறித்த குற்றவியல் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் ஏதும் அளிக்கவில்லை. நான் மருத்துவமனையில் கொண்டுபோய் சேர்த்தேனா என்றால் ஆமாம். போலீஸ்சார் என்னை விசாரித்தார்கள் . விபத்தில் இறந்தவர் தெரிந்தவர் கிடையாது. இறந்தவருக்கு 60 வயதிற்கு மேல் இருக்கும். நான் 20-30 அடி துாரத்தில் இருந்து பார்த்ததாக சத்திய பிரமாணவாக்குமூலத்தில் கூறியுள்ளேன். அடிப்பட்டவர் சென்ற வாகனத்திற்கும், எனது வாகனத்திற்கும் இடையே வேறு வாகனங்கள் வரவில்லை. இருசக்கரவாகனமும், லாாியும் விபத்தில் ஈடுபட்டது. லாாியின் நடுப்பகுதியில் இடித்து விபத்து ஏற்பட்டது. லாாி சாலையின் வலது பக்கம் சென்றது. அந்த இடத்தில் சிக்னல் உள்ளது. விபத்து வலது பக்கம்தான் நடந்துள்ளது என்றால் தவறு. இடித்து விழுந்த இடம் இடதுபக்கம். விபத்து நடந்தது வலது பக்கம். இருசக்கரவாகனம் எந்த போகவேண்டுமென எனக்கு தெரியாது. அடிப்பட்டவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. அவர் தலைக்கவசம் அணிந்திருந்தார். தலைக்கவசத்தை ஒழுங்காக லாக் செய்யவில்லை. நான் பார்க்காத விபத்தை பார்த்ததாக மனுதாரருக்கு

உதவும் நோக்கில் இழப்பீடு பெறவேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.